## எதுவும் பதில் வரலைன்னா என்னங்கய்யா பண்றது?



- ✤ தவறான தகவலோ, முழுமைபெறாத தகவலோ இருந்தால் பொது அதிகாரத்துவத்தின் மூத்த அதிகாரிக்கு முதல் மேல்முறையீடு செய்யலாம்.
- ✤ அங்கிருந்தும் தவல் 30 நாட்களுக்குள் கிடைக்கவில்லை என்றால் புதிய காமதேனு பல்பொருள் அங்காடி முதல் தளம் எண்.378, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை -18ல் அமைந்துள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்யலாம்.
- ✤ செய்யப்பட்ட மேல்முறையீடு 30-45 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.
- ✤ மறுப்பதற்கான காரணத்தை நிரூபிப்பது பொது அதிகாரத்துவத்தைச் சார்ந்ததாகும்.
- ✤ காரணமில்லா கால தாமதம் செய்ததற்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.250 முதல் ரூ.25000 வரை அபராதம் விதிக்கப்படும்.
- ✤ விண்ணப்பத்தினை போதிய காரணங்கள் இன்றி நிராகரித்தல், திட்டமிட்டு நிராகரித்தல் தவறான தகவல் என தெரிந்தோ அல்லது தகவலை மாற்றி தந்தாலோ அபராதம் ரூ.25000 வரை விதிக்கப்படும்.

*இது தொடர்பா மேலும் விபரங்களை பெறணும்னா யாரை தொடர்பு கொள்வது?*


**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)**
மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்,
நாகப்பட்டினம் - 611003.
☎: 04365 - 253048




நம்ம பிரச்சனைகளுக்கான தீர்வு நம்முடையகையிலே தாங்க இருக்கு. முதல்ல நான் எங்கள் சுய உதவிக்குழுவிலுள்ள எல்லாருக்கும் நீங்க எனக்கு தெளிவுப்படுத்தின மாதிரிசொல்லி இந்தச் சட்டம்பற்றியவிழிப்புணர்வை ஏற்படுத்த போறேன் என



விறு விறுவென்று வாத்தியாரிடமிருந்து நம்மிடமிருந்து விடைப்பெறறுப் போகிறாள் லட்சுமி.

லட்சுமிக்கு தகவல் உரிமைச் சட்டம் குறித்த விளக்கங்கள் நன்றாகவே புரிந்திருக்கிறது. நமக்கு தானே!




**பொறுப்பான சமுதாயத்தை சிறப்பாகப் படைக்க பங்கேற்போம்! படைதிரள்வோம்!**

### நாகப்பட்டினம் மாவட்டத்தில்

# தகவல் பெறும் உரிமைச்சட்டம்-2005

## குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம்



## வினா – விடை விளக்கம்

பிரச்சார ஒருங்கிணைப்பு

மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து


**அண்ணா மேலாண்மை நிலையம்**
163/1, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை,
சென்னை - 600 028
☎: 044 - 24937170

# தகவல்பெறும்உரிமைச்சட்டம்-2005

## குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம்

பெரியோர்களே!

சித்திரத்தில் நாம் காணும் கற்பனை பாத்திரங்கள் சுந்தரராமன் மற்றும் லட்சுமி. முதியவரான சுந்தராமன் ஓய்வு பெற்ற ஆசிரியர். அவருடைய ஊரில் அனைவரின் சந்தேகங்களுக்கும் சரியான, முறையான விளக்கம் தருபவர். விவசாய தொழிலாளியான லட்சுமியின் தகவல் பெறும் உரிமைச்சட்டம் குறித்த கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கிறார்.

## வாத்தியாரய்யா! தகவல் – னா என்ன?



தகவல் என்பது எவ்வடிவத்திலும் இருக்கிற விவரப்பொருள் அதாவது பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்பாணைகள், மின்னஞ்சல்கள், கருத்துகள், அறிவுரைகள், பத்திரிக்கைக் குறிப்புகள், சுற்றறிக்கைகள், ஆணைகள், ஏடுகள், ஒப்பந்தங்கள், மாதிரி அமைப்புகள், எந்தவொரு மின்னணு வடிவத்திலும் வைத்திருக்கும் தரவுப்பொருட்கள் ஆகியவை ஆகும்.

## தகவல் உரிமைன்னு சொல்றாங்களே அப்படின்னா?

பொது அதிகாரத்துவங்களின் கட்டுப்பாட்டில் உள்ள தகவலைக் குடிமக்கள் அணுகிப் பெறுவதே தகவல் உரிமை.

## பொது அதிகாரத்துவம் – னா என்னாங்கய்யா?



அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ், நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்ட மன்றத்தின் சட்டங்களினால் நிறுவப்பட்ட அரசுக்குச் சொந்தமான, அதன் கட்டுப்பாட்டிலுள்ள அமைப்புகள் மற்றும் அதனிடமிருந்து நேரடியாகவோ, சுற்றடியாகவோ கணிசமாக நிதி பெறுகிற அரசுசாரா அமைப்புகள் ஆகியவை ஆகும்.

*வெளிப்படைத் தன்மையுள்ள ஜனநாயக அரசை ஊக்குவிக்க, சமூகநீதியை நிலைநாட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்துவோம்.*

## தகவல் உரிமைச் சட்டம் ன்னு ஏன் கொண்டுவந்தாங்க?



பொது அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் ஒளிவு மறைவற்ற வெளிப்படையான செயல்பாட்டை உறுதி செய்வதற்கும் லஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்து, அரசும் அதன் அங்கங்களும் மக்களிடம் பொறுப்புடன் நடக்கச்செய்வதற்கும் தான் இதை சட்மாக 2005ம் ஆண்டு ஜுன் மாதம் 11ம் தேதி நிறைவேற்றப்பட்ட கூட்டத்திற்கு ஜுன் 15ம் தேதி குடியரசு தினத்தலைவர் கையொப்பமிட்டார்கள்.

## நாங்க எல்லாம் போய் கேட்டா தகவல் கிடைக்குமா?

அனைத்து இந்திய மக்களுக்கும் தகவல் பெற விண்ணப்பிக்கும் உரிமை உண்டு (ஜம்மு மற்றும் காஷ்மீர் தவிர)

## எப்படியெல்லாம் தகவலை பெறலாம்?

நாம நேராக போய் ரெக்கார்டுகளைச் சோதனையிடலாம், அதிலிருந்து குறிப்பு எடுத்துக்கொள்ளலாம். உண்மையென உறுதியளிக்கப்பட்ட ஜெராக்ஸ் பிரதிகளாகவும் பெறலாம். தேவையானால் சி.டியிலும் ஆவணங்களை பதிவு செய்யலாம்.

## அது சரி, அப்ப தகவலை வாங்கணும்னா நெறைய பணசெலவாகுமுன்னு சொல்லுங்க?



இல்லவே இல்ல ... விண்ணப்ப கட்டணமாக ரூ.10 செலுத்தினால் போதும். நாம கேட்கும் தகவல் அதிகமான பக்கங்களில் இருந்தால் தாளுக்கு ரூ.2 வீதம் கட்டணம் செலுத்த வேண்டும்.

கணினி சார்ந்த பதிவுகள் தேவைப்பட்டால் அதாவது, சிடி அல்லது பிளாப்பிக்கு ரூ.50ம் செலுத்த வேண்டும். எல்லாத்துக்கும் கட்டாயம் ரசீது வாங்கவேண்டும்.

வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் மக்களுக்கு எந்தவிதக் கட்டணமும் கிடையாது. தகவல் நமக்கு தெரிவிப்பதற்கு கால தாமதம் ஏற்பட்டால், நாம தகவலை பெற கட்டணம் செலுத்த வேண்டிய தேவையில்லை.

## இப்ப நம்ம ஊரைப்பற்றி ஏதாவது தகவல் தெரிஞ்சுக்க வேணும்னா எப்படி விண்ணப்பிக்கணும்?



கையால் எழுதியோ அல்லது மின்னச்சு செய்தோ நாம கேட்க விரும்பும் தகவலை, பொதுத்தகவல் அதிகாரிக்கு அனுப்பலாம். விண்ணப்பக்கட்டணத்தை ரொக்கமாக செலுத்தலாம் அல்லது நீதிமன்ற வில்லையாக மனுவில் ஒட்டி அனுப்பலாம்.

வரைவோலையாக செலுத்த விரும்பினால் கருவூலத்திலோ, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ 0075-00-Misc..... DPC 0075 00 800 BK 0006 என்ற தலைப்பில் செலுத்தலாம். இவை தவிர வங்கி காசோலையாகவும் செலுத்தலாம். இதனை விண்ணப்பத்துடன் இணைத்து பொது தகவல் அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

## விண்ணப்பிச்சா நமக்கு எத்தனை நாளுக்குள் பதில் வரும்



நாம் கேட்டும் தகவல் விண்ணப்பித்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும்.

தகவல் ஒருவரின் உயிர் மற்றும் உடமைகள் காக்கும் தகவல்கள் கோரப்பட்டது என்று இருக்கும்பட்சத்தில், வேண்டுகோள் பெறப்பட்டு 48 மணி நேரத்திற்குள் வழங்கப்படவேண்டும்.

ஒருவேளை தகவலுக்கான விண்ணப்பம் உதவி பொதுத்தகவல் அதிகாரியிடம் கொடுக்கப் -பட்டிருந்தால் 5 நாட்கள் கூடுதலாக எடுக்கப்படலாம். மூன்றாவது நபரின் தலையீடு இருக்குமானால் கால வரையறை 40 நாட்கள் வரை எடுத்துக்கொள்ளலாம்.

***ஊழலை ஒழிப்போம்! அரசை பொறுப்பாக்குவோம்!!***